**FIRST INFORMATION REPORT**

**முதல் தகவல் அறிக்கை**

(Under Section 154 Cr.P.C.)

(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

**TAMIL NADU POLICE**

INTEGRATED INVESTIGATION FORM-I

C 8066946

1. District : மாவட்டம் கடலூர் PS: காவல்நிலையம் ஊ.த.க. பிரிவு Year: ஆண்டு 2019 FIR No.: மு.த.அ. எண் 8/2019 Date: நாள் 09.07.2019

2. (i) Act சட்டம்: Criminal Procedure Code, 1973 — Sections பிரிவுகள்: 102

   (ii) Act சட்டம்: Prevention of Corruption Act 1988 as amended by The Prevention of Corruption (Amendment) Act 2018 — Sections பிரிவுகள்: 7

   (iii) Act சட்டம்: — Sections பிரிவுகள்:

   (iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள் — Date from : நாள் முதல் 27.06.2019 17.30 hrs — Date to : நாள் வரை 27.06.2019 20.30 hrs

   Time Period : நேர அளவு — Time from : நேரம் முதல் — Time to : நேரம் வரை

   (b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 09.07.2019 — Time : நேரம் 1600 hrs

   (c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் Vol - III — Time : நேரம் 1600 hrs

4. Type of Information : Written/ Oral : தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக கணினி தட்டச்சு

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும் சுமார் 35 கி.மீ. மேற்கு

   Beat Number : முறைக் காவல் எண் — (b) Address : முகவரி சார் பதிவாளர் அலுவலகம், புதுப்பேட்டை, பண்ருட்டி வட்டம், கடலூர் மாவட்டம்.

   (c) In case outside limit of this Police Station, then the Name of P.S : -- District : --------------
   இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் அ. அமுதா — (b) Father's/ Husband's Name : தந்தை / கணவர் பெயர்

   (c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு — (d) Nationality : நாட்டினம் இந்தியன் — (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்

   Date of Issue : வழங்கப்பட்ட நாள் — Place of Issue : வழங்கப்பட்ட இடம்

   (f) Occupation : தொழில் உதவி ஆய்வுக்குழு அலுவலர் — (g) Address : முகவரி மாவட்ட ஆய்வுக்குழு அலுவலர் அலுவலகம், கடலூர் மற்றும் விழுப்புரம் மாவட்டம், கடலூர் மாவட்ட ஆட்சியரகம், கடலூர்.

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
   தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)

   R.சண்முகம், உதவியாளர், சார் பதிவாளர் (பொறுப்பு), புதுப்பேட்டை சார் பதிவு அலுவலகம், பண்ருட்டி வட்டம், கடலூர் மாவட்டம்.

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
   குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்

* GCP-240-34(Type-2) 90,000 Cps.-2T.3.16(HCL-12)

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால்

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

<u>பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது.</u>

இன்று 09.07.2019 ந்தேதி மாலை 16.00 மணிக்கு கடலூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு அலுவலகத்தில் நான் பணியில் இருந்தபோது, அ.அமுதா, உதவி ஆய்வுக்குழு அலுவலர், மாவட்ட ஆய்வுக்குழு அலுவலகம், கடலூர் மற்றும் விழுப்புரம் மாவட்டம், கடலூர் மாவட்ட ஆட்சியரகம், கடலூர் என்பவர் ஆஜராகி கொடுத்த புகாரை பெற்று கீழ்க்கண்டவாறு வழக்கு பதிவு செய்யப்பட்டது. புகாரின் விவரம் பின்வருமாறு, நாள் : 09.07.2019, அனுப்புநர், அ. அமுதா, உதவி ஆய்வுக்குழு அலுவலர், கடலூர் மற்றும் விழுப்புரம் மாவட்ட ஆய்வுக்குழு அலுவலர் அலுவலகம், மாவட்ட ஆட்சியர் அலுவலகம், கடலூர் மாவட்டம், கடலூர். பெறுநர், காவல் ஆய்வாளர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, கடலூர். அய்யா, பொருள் : திடீர் ஆய்வு சோதனை – சார்

(தொடர்ச்சி பக்கம் -3)

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ...................... Rank ...................... to take up the Investigation / Refused Investigation / transferred to PS..............................................on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் .............................. பதவி ...................... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு .............................................. காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் /
பெருவிரல் இரேகைப் பதிவு

Signature of the Officer in-charge, Police Station 9/7/19
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்
9-7-19 at 17.ws.

Name: பெயர் S. THIRUVENGADAM.
Rank: நிலை ....................No. எண் ..........
Inspector of Police,
V&AC Cuddalore.

பதிவாளர் அலுவலகம், புதுப்பேட்டை, பண்ருட்டி வட்டம், கடலூர் மாவட்டம் – திடீர் ஆய்வு சோதனை – உரிய சரியான முகாந்திரம் இன்றி கைப்பற்றப்பட்ட ரொக்கப்பணம் – திடீர் ஆய்வு மகஜரில் கைப்பற்றுதல் – ஒப்படைப்பு – நடவடிக்கை எடுக்க வேண்டி புகார் மனு சமர்ப்பித்தல் – சம்மந்தமாக. கடலூர் மற்றும் விழுப்புரம் மாவட்ட ஆய்வுக்குழு அலுவலர் அலுவலகம், கடலூர் (இருப்பு) உதவி ஆய்வுக்குழு அலுவலரான அ.அமுதா ஆகிய நான் எனது அலுவலகத்தில் இருக்கும் போது எனக்கு கிடைத்த தகவலின் படி கடலூர் மாவட்டம், புதுப்பேட்டை சார்பதிவக அலுவலகத்தில் புதுப்பேட்டையில் உள்ள ஆவண எழுத்தர்கள் இன்று 27.06.2019 புதுப்பேட்டை சார்பதிவகம், பிரிவு உதவியாளர் பொறுப்பு சார்பதிவாளர், புதுப்பேட்டை சார்பதிவகம் திரு. R.சண்முகம் என்பவரை சந்தித்து ஆவணங்கள் பதிவு செய்வதற்காகவும் மற்றும் இதர பதிவுகளுக்காகவும் லஞ்சமாக பணம் கொடுக்க போவதாக கிடைக்க பெற்ற ரகசிய தகவலை பெற்று, உடனடியாக நான் புறப்பட்டு எங்களது மாவட்ட ஆட்சியர் அலுவலகத்திற்கு அருகே இருக்கும் கடலூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு அலுவலகத்திற்கு மாலை சுமார் 3.00 மணிக்கு வந்து அங்கு பணியில் இருந்த ஆய்வாளர் S.திருவேங்கடம் அவர்களிடம் எனக்கு கிடைத்த ரகசிய தகவலை தெரிவித்தும், மேலும் எனது தலைமையில் மேற்படி புதுப்பேட்டை சார்பதிவகம் அலுவலகத்திற்கு மாலை சுமார் 5.30 மணிக்கு மேல் சென்றால் அங்கு ஆவண எழுத்தர்கள் புதுப்பேட்டை சார்பதிவகத்தில் பத்திர பதிவிற்கு கொடுக்க உள்ள பணத்தை திடீர் ஆய்வு செய்து கைப்பற்றலாம் என நான் கூறியதன் அடிப்படையில், ஆய்வாளர் அலுவலகத்தில் இருந்த காவல் குழுவினருடன் ஆலோசனை செய்தார். பின்னர் நானும், ஆய்வாளர் திருவேங்கடம் மற்றும் அவரது காவல் குழுவினர்களும் மாலை 4.00 மணிக்கு இரண்டு அரசு வாகனங்களில் புறப்பட்டு கிழக்கு மேற்காக செல்லும் பண்ருட்டி – அரசூர் சாலையின் வடபுறமாக புதுப்பேட்டை காவல்நிலையத்திற்கு மேற்கே அமைந்துள்ள புதுப்பேட்டை சார்பதிவாளர் அலுவலகத்திற்கு சற்று வெளியே மறைவாக வாகனங்களை நிறுத்தினோம். சிறிது நேரம் எங்களது குழுவினர் அனைவரும் புதுப்பேட்டை சார்பதிவாளர் அலுவலகத்தை கண்காணித்து பின்னர் மாலை சுமார் 5.30 மணிக்கு தெற்கு பார்த்து அமைந்து இருக்கும் புதுப்பேட்டை சார்பதிவாளர் அலுவலகத்திற்கு உள்ளே சென்றோம். அப்போது அங்கிருந்த பொதுமக்கள் பதற்றத்துடன் சார்பதிவாளர்

அ.அமுதா
9/7/19

அலுவலகத்தைவிட்டு வெளியேற முயன்றவர்களை தடுத்து நிருத்தி விசாரித்தபோது, அவர்கள் பத்திரம் பதிவு செய்வதற்காக சார் பதிவாளர் அலுவலகம் வந்ததாக தெரிவித்தார்கள். பின்னர், ஆய்வாளர் புதுப்பேட்டை சார்பதிவாளர் அலுவலகத்திலிருந்து பயந்து ஓடி வெளியே வந்தவர்களை, அலுவலகத்தின் மெயின் ஹாலில் உட்கார வைத்துவிட்டு, பாதுகாப்பிற்கு காவலர்களை நியமித்தார். நானும், ஆய்வாளரும் மற்றும் இதர காவல் குழுவினரும் மெயின் ஹாலில் தெற்கு பார்த்து அமர்ந்திருந்த நபரிடம், அவர்தான் சார்பதிவாளர் என தெரிந்துகொண்டபின்னர், என்னையும், ஆய்வாளரையும் மற்றும் ஆய்வு குழுவினரையும் அடையாள அட்டையை காண்பித்து அறிமுகம் செய்து வைத்தேன். பின்னர் அவரை பற்றி விசாரித்த போது தனது பெயர் R.சண்முகம், வயது 45, த/பெ ரத்தினவேல், உதவியாளர், சார்பதிவாளர் அலுவலகம், புதுப்பேட்டை என்றும் தற்போது புதுபேட்டை சார்பதிவாளர் பணியிடத்தில் பணிபுரியும் திருமதி.காந்திகனிமொழி என்பவர் அயல்பணியாக கடலூர் சார்பதிவாளர் இணை–1 அலுவலகத்தில் சார்பதிவாளராக பணிபுரிந்துவருவதால், மேற்படி சார்பதிவாளர் பணியிடத்தை கூடுதல் பொறுப்பாக கடந்த ஆகஸ்ட்/2018 முதல் கவனித்து வருவதாகவும், கதவு எண்.605/3, இளங்கோ நகர், வடலூர் அஞ்சல், குறிஞ்சிப்பாடி தாலுக்கா, கடலூர் மாவட்டம் என்ற முகவரியில் வசித்து வருவதாகவும் தன்னை அறிமுகம் செய்து கொண்டார். பின்னர் நான் மேற்படி அலுவலகத்தை, உதவியாளர் (சார்பதிவாளர் பொறுப்பு) திரு. சண்முகம் அவர்கள் முன்னிலையிலேயே ஆய்வு செய்ய போகும் விவரத்தை தெரிவித்தேன். மேலும் சோதனையை துவக்குவதற்கு முன்னர், குழுவில் இடம் பெற்றிருந்த அனைவரும் அவரது முன்னிலையில் சுய சோதனை செய்து குழுவினரிடம் பொருளோ, பணமோ இல்லை என்பதை உறுதி செய்து கொண்டோம். மேற்படி புதுப்பேட்டை சார்பதிவாளர் அலுவலகமானது சுற்றுசுவற்றுடன் கூடிய அரசு கட்டிடமாகும். இதன் பிரதான வாயிற்படி தெற்கு நோக்கி அமைக்கப்பட்டுள்ளது. இவ்வலுவலகத்தின் வராண்டா சுமார் 20 x 5 அடி நீள அகலமுள்ளது. அதன் வடபுறம் பிரதாக வாயிற்படியும், அதனை அடுத்து சுமார் 20 x 16 அடி நீள அகலமுள்ள பிரதான அறை அமைக்கப்பட்டுள்ளது. அந்த அறையின் வடபுறம் சார் பதிவாளர் இருக்கை தெற்கு பார்த்தவாறு ஒரு மேடை அமைக்கப்பட்டுள்ளது. அதன் மேலே கணினி மானிட்டர் வைக்கப்பட்டுள்ளது. அந்த

அ.த (signature) 9/7/19

இருக்கைக்கு கிழக்கு புறம் சிறிது உயரம் குறைவாக மற்றொரு டேபிள் சேர் வைக்கப்பட்டுள்ளது. அதில் சார்பதிவாளர் (பொறுப்பு) சண்முகம் அவர்களின் இருக்கை உள்ளது. அந்த மேஜையின்மீது கணினியின் கீபோர்டு வைக்கப்பட்டுள்ளது. மேற்படி ஹாலிற்கு வடமேற்கில் சுமார் 14 x 10 அடி நீல அகலம் கொண்ட கண்ணாடி கதவுகள் பொறுத்தப்பட்ட குளிர்சாதனைப் பெட்டி கொண்ட சர்வர் ரூம் அமைக்கப்பட்டுள்ளது. மேற்படி ஹாலுக்கு மேற்குபுறம் சுமார் 25 x 15 அளவுகொண்ட பதிவுரு வைப்பறை உள்ளது. அந்த வைப்பறையில் 3 வரிசைகளாக ஆவணங்கள் வைப்பதற்காக இரும்பு பீரோக்கள் மற்றும் மர பீரோக்கள் வைக்கப்பட்டிருந்தன. மேலும் சுவற்று அலமாறிகள் பொருத்தப்பட்டிருந்தன. அதில் ஆவணங்கள் அடுக்கிவைக்கப்பட்டிருந்தது. அந்த அறைக்கு தென்புறம் சுமார் 6 x 10 அடி நீல அகலம் கொண்ட ஆவண அறை உள்ளது. அதில் சுவற்று அலமாறியும், ஒரு இரும்பு பீரோவும் உள்ளது. ஹாலுக்கு வடபுறம் சுமார் 10 x 15 நீல அகலம் கொண்ட ஸ்கேன் ஆப்பரேட்டர் ரூம் உள்ளது. மேற்படி கட்டிடத்திற்கு வடகிழக்குபுறம் கழிவறைகள் அமைக்கப்பட்டுள்ளது. பின்னர் நான், ஆய்வாளர் திருவேங்கடம், பொறுப்பு சார்பதிவாளர் சண்முகம் மற்றும் காவல் குழுவினருடன் அலுவலக ஹாலில் 1) சார்பதிவாளர் அலுவலகத்தில் நுழைந்தவுடன் இடதுபுறமாக உள்ள பதிவறு வைப்பறை உள்ளது. அவ்வறையில் வலதுபுறத்தில் உள்ள சுமார் 6 க்கு 3 அடி அளவுள்ள இரும்பு பீரோவை சோதனை செய்ய மேலிருந்து கீழாக நான்கு அடுக்குகள் இருந்தது. அதில் இரண்டாவது அடுக்கில் அடுக்கிவைக்கப்பட்டிருந்த ஆவணங்களை சோதனை செய்து பார்க்க ஆவணங்கள் அடியில் பணம் மறைத்து வைக்கப்பட்டிருந்து. மேற்படி பணத்தை எண்ணிப்பார்க்க (1) 2000 x 3 = 6000/- (2) 500 x 10 = 5,000/- (3) 200 x 15 = 3,000/-, (4) 100 x 46 = 4600/- (5) 50 x 10 = 500 (6) 20 x 7 = 140, (7) 10 x 41 = 410 ஆக மொத்தம் ரூ.19,650/– பணம் இருந்தது. மேற்சொன்ன பணம் சம்மந்தமாக என்னுடன் இருந்த பொறுப்பு சார்பதிவாளர் சண்முகத்திடம் விவரம் கேட்க, இந்த பணம் விவரம் கேட்க, இந்த பணம் இந்த இடத்தில் எப்படி வந்தது என தெரியாது என தெரிவித்தார். 2) மேற்சொன்ன இரும்பு பீரோவின் நேர் எதிரே கிழக்கு பார்த்து அமைந்திருந்த சுமார் 6 க்கு 3 அடி அளவுள்ள மற்றொரு இரும்பு பீரோவை சோதனையிட மேலிருந்து கீழாக

9/7/19

நான்கு அடுக்குகள் இருந்தது. அதில் இருந்த ஆவணங்களை சோதனை செய்து பார்க்க நான்காவது அடுக்கில் உள்ள ஆவணங்கள் அடியில் பணம் மறைத்து வைக்கப்பட்டிருந்து. மேற்படி பணத்தை எண்ணிப்பார்க்க (1) 2000 x 4 = 8000/- (2) 500 x 10 = 5,000/- (3) 200 x 5 = 1,000/-, (4) 100 x 50 = 5000/- (5) 50 x 20 = 1000/-, (6) 20 x 10 = 200, (7) 10 x 50 = 500 ஆக மொத்தம் ரூ.20,700/– பணம் இருந்தது. மேற்சொன்ன பணம் சம்மந்தமாக என்னுடன் இருந்த பொறுப்பு சார்பதிவாளர் சண்முகத்திடம் விவரம் கேட்க, இந்த பணம் விவரம் கேட்க, இந்த பணம் இந்த இடத்தில் எப்படி வந்தது என தெரியாது என தெரிவித்தார். 3) மேற்சொன்ன இரும்பு பீரோவிற்கு பின்னால் இருந்த சுமார் 6க்கு 3 அடி அளவுள்ள மர அலமாரியை சோதனையிட மேலிருந்து கீழாக நான்கு அடுக்குகள் இருந்தது. அதில் இருந்த ஆவணங்களை சோதனை செய்து பார்க்க நான்காவது அடுக்கில் உள்ள ஆவணங்கள் அடியில் பணம் மறைத்து வைக்கப்பட்டிருந்து. மேற்படி பணத்தை எண்ணிப்பார்க்க (1) 200 x 28 = 5,600/- (2) 100 x 25 = 2,500/- (3) 50 x 10 = 500 ஆக மொத்தம் ரூ.8,600/– பணம் இருந்தது. மேற்சொன்ன பணம் சம்மந்தமாக என்னுடன் இருந்த பொறுப்பு சார்பதிவாளர் சண்முகத்திடம் விவரம் கேட்க, இந்த பணம் விவரம் கேட்க, இந்த பணம் இந்த இடத்தில் எப்படி வந்தது என தெரியாது என தெரிவித்தார். 4) மேற்சொன்ன பதிவுருவைப்பறையிலிருந்து தெற்புறமாக அமைக்கப்பட்டிருந்த சிறிய ஆவண அறையில் வடக்குபுறமாக வைக்கப்பட்டிருந்த சுமார் 4க்கு 3 அடி அளவுள்ள இரும்பு பீரோவை சோதனையிட அதன் கீழ் தட்டில் சோதனை செய்து பார்க்க அதில் அடுக்கி வைக்கப்பட்டிருந்த ஆவணங்களுக்கு இடையே பணம் மறைத்து வைக்கப்பட்டிருந்து. மேற்படி பணத்தை எண்ணிப்பார்க்க (1) 200 x 5 = 1,000/–, (2) 100 x 25 = 2,500/- (3) 50 x 10 = 500/-, (4) 20 x 10 = 200/- (5) 10 x 50 = 500, ஆக மொத்தம் ரூ.4,700/– பணம் இருந்தது. மேற்சொன்ன பணம் சம்மந்தமாக என்னுடன் இருந்த பொறுப்பு சார்பதிவாளர் சண்முகத்திடம் விவரம் கேட்க, இந்த பணம் விவரம் கேட்க, இந்த பணம் இந்த இடத்தில் எப்படி வந்தது என தெரியாது என தெரிவித்தார். மேலும், மேற்சொன்ன சோதனையில் கைப்பற்றப்பட்ட பணத்திற்கு சரியான முகாந்திரம், சார்பதிவாளர் சண்முகத்திடம் தெரிவிக்காததால் மேற்படி பணம் மொத்தம் ரூ.53,650/– பத்திரபதிவு அலுவலகத்தில் பதிவு நடவடிக்கைக்காக லஞ்சமாக பெறப்பட்டிருக்கலாம் என கருதி

அ.[signature]
9/7/19

உரிய நடவடிக்கை எடுக்க வேண்டி கைப்பற்றினேன். சோதனையின் போது சார்பதிவாளர் அலுவலகத்தினுல் கேமரா ஆப்பரேட்டராக பணியில் இருந்த நடராஜன் (31), த/பெ. செல்வம், மாரியம்மன் கோயில் தெரு, கொண்டாரெட்டிபாளையம், பண்ருட்டி தாலுக்கா, கடலூர் மாவட்டம், மற்றும் ஸ்கேன் ஆப்பரேட்டராக பணியில் இருந்த ஸ்ரீராம் (22), த/பெ. ராமகிருஷ்ணன், எண்.1063, முருகன் கோயில் தெரு, அங்குசெட்டிபாளையம், பண்ருட்டி தாலுக்கா, கடலூர் மாவட்டம் ஆகியோர் பணியில் இருந்தனர். இவர்களைப் பற்றி விசாரிக்க முறையே Out sourcing அடிப்படையில் TCS மற்றும் 9 star கம்பெனியின் மூலம் ஊதியம் பெற்று பணிபுரிவதாக சொன்னார்கள். மேலும் அலுவலகத்தில் M.ஷோபா(41), க/பெ.சங்கர், பக்கிரிபாளையம் தெரு, புதுப்பேட்டை, கடலூர் மாவட்டம் என்பவர் சார் பதிவாளர் அலுவலகத்தில் Data entry operator ஆக பணிபுரிந்துவருவதாகவும், இவரை பற்றி விசாரிக்க இவர் Out sourcing அடிப்படையில் பணிபுரிந்து வருவதாக தெரிவித்தார். மேலும், D.அமுதவேல் (48), த/பெ.தண்டபாணி, வெங்கடா நகர், K.N.பேட்டை, கடலூர் என்பவர் சார்பதிவாளர் அலுவலகத்தில் அலுவலக உதவியாளராக பணிபுரிந்து வருவதாக தெரிவித்தார். மேற்சொன்ன ஆய்வின்போது கணக்கில் வராத, சார்பதிவாளரால் உரிய காரணம் தெரிவிக்காத பணம் ரூ.53,650/– மட்டும் கைப்பற்றப்பட்டது. மேலும், 1) வருகை பதிவேடு (பக்கம் 1 முதல் 62 வரை), 2) தாமத வருகை பதிவேடு (பக்கம் 1 முதல் 104 வரை) 3) தனி நபர் பண இருப்பு பதிவேடு (பக்கம் 1 முதல் 182 வரை), 4) இயக்கப்பதிவேடு (01.01.2019 முதல் 04.06.2019 வரை பதிவுகள் உள்ளது) 5) தற்செயல் விடுப்பு பதிவேடு (பக்கம் 1 முதல் 28 வரை) 6) தணிக்கை வருகைப்பதிவேடு (பக்கம் 1 முதல் 50 வரை) ஆகிய பதிவேடுகள் மேல்விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது. இந்த நிகழ்வுகள் தொடர்பாக திடீர் ஆய்வு மகஜர் மாலை 5.30 மணி முதல் இரவு 8.30 மணிக்கு முடிக்கப்பட்டது. மேலும் சோதனையின் போது என்னாலோ, என்னுடன் வந்த கடலூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு ஆய்வாளர் மற்றும் அவர்களது குழுவினராலோ மேற்படி அலுவலகத்தில் எனது தலைமையில் ஆய்வு குழு சோதனை செய்த போது எந்தவித ஆவணங்களையோ, பொருட்களையோ சேதப்படுத்தவில்லை. மேலும் எங்களது மேற்படி ஆய்வின் போது அலுவலகத்தில் பணிபுரியும் ஊழியர்களுக்கு மன உளைச்சலை ஏற்படுத்தும் வகையில்

அ.[signature]
9/7/19

நடந்து கொள்ளவில்லை. உத்திரவுப்படி இன்று 09.07.2019ந் தேதி மாலை 16.00 மணிக்கு கடலூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு அலுவலகம் வந்து, கடந்த 27.06.2019ந்தேதி புதுப்பேட்டை சார்பதிவாளர் அலுவலகத்தில் மேற்படி திடீர் ஆய்வு சம்மந்தமாக சட்டப்பூர்வ நடவடிக்கை எடுக்க வேண்டி, திடீர் ஆய்வின்போது தயார் செய்யப்பட்ட அசல் திடீர் ஆய்வு மகஜர், ஆய்வின்போது கைப்பற்றப்பட்ட பணம் ரூ.53,650/–, திடீர் ஆய்வு மகஜரில் குறிப்பிட்டுள்ள கைப்பற்றப்பட்ட ஆவணங்களை இத்துடன் இணைத்து உரிய நடவடிக்கைக்காக ஒப்படைக்கப்படுகிறது. மேலும் இது சம்மந்தமாக பதிவு செய்யும் வழக்கின் விவரம் பின்னர் தெரியப்படுத்துமாறு இதன் மூலம் கேட்டுக்கொள்கிறேன். தங்கள் உண்மையுள்ள, (கையொப்பம்), (அ.அமுதா). அய்யா, நான் இன்று 09.07.2019 மாலை 16.00 மணிக்கு மேலே கண்ட புகார் மனுவை பெற்று, கடலூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு குற்ற எண்.8/2019, சட்டபிரிவு 102 குற்றவியல் நடைமுறை சட்டம் மற்றும் சட்டப்பிரிவு 7 ஊழல் தடுப்பு சட்டம் 1988, ஊழல் தடுப்பு (திருத்தியமைக்கப்பட்ட) சட்டம் 2018 ன்படி வழக்கு பதிவு செய்யப்பட்டது.

இதன் அசலை, வாதியின் புகார் மனுவுடன் இணைத்து, கணம் தலைமை நீதித்துறை நடுவர் மற்றும் சிறப்பு நீதிபதி, கடலூர் அவர்களுக்கும், இதர நகல்களை சம்மந்தப்பட்ட அதிகாரிகளுக்கும் பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது.

சா.தி [signature]
9/7/19

S. THIRUVANGADAM,
Inspector of Police,
V&AC, Cuddalore.